இணைப்பு 1.

(133-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 185க்கான விடையைக் காண்க).

சிலைகள் திருட்டு போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

(1) பழம்பெரும் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் குறித்த 1972-ம் வருடத்திய தொல் பொருள் பதிவுச் சட்டத்தின் படி, ஆலயங்களிலுள்ள தொன்மையான விக்கிரகங்கள் மற்றும் சிலைகளை பதிவு செய்யப்படுகிறது.

(2) விக்கிரகங்களை நிழற்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்து ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள விக்கிரகங்கள் ஒரு தனிப்பதிவு பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

(3) போதிய பாதுகாப்பு வசதியற்ற ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் அருகில் உள்ள பெரிய ஆலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

(4) சிலைகள் உள்ள இடங்களுக்கு போதுமான காவல் நியமனம் செய்யப்படுகின்றது. பாதுகாப்புப் பதிவேடு பேணப் பட்டு, அதில் காவலர்கள் தினப்படி பணி மாற்றம் ஆகும்போது விவரங்கள் குறிக்கப்படுகின்றன. தற்போது பூட்டப்பட்டுள்ள பூட்டுக்கள் போதுமான பாதுகாப்பு இல்லாமலிருப்பின் கூடுதல் பூட்டுக்கள் பூட்டப்படுகின்றன.

(5) ஒவ்வொரு சன்னதிக்கும் கதவு அல்லது கதவுக்கு மேல் இரும்புக் கம்பியாலான கதவுகள் போடப்பட்டு வருகின்றன.

(6) சிலைகள் பாதுகாப்பாக வைக்கும் இடத்தை பாதுகாக்கவும் மேற்படி இடத்திற்கு அவசியமான பந்தோபஸ்து செய்யவும், அந்தந்த ஆலயங்களின் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசு மான்யமும் வழங்கப்பட்டு உள்ளன.

(7) ஆலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாச்சாரியார்கள், அல்லது குருக்கள் அல்லது பண்டாரங்கள் இருப்பின் தினப்படி அல்லது ஆலயத்திற்கு தகுந்தவாறு பணிமாற்றம் செய்யும்போது பணிமாற்றப் பதிவேட்டில் (Turn Regist(r) கையொப்பம் பெறப்படுகிறது. ஒரே ஒரு பட்டாச்சாரியார் அல்லது குருக்கள் அல்லது பண்டாரம் இருந்து சன்னதிகள் பலவாக இருந்தால், ஒரு சன்னதியிலிருந்து மற்றொரு சன்னதிக்கு செல்லும் போது

1981 பிப்ரவரி 5]

முந்தைய சன்னதி பாதுகாப்புக்காகப் பூட்டிச் செல்லப்படுகிறது. மேற்சொன்னவர்கள் இல்லாத சமயம் எந்த சன்னதியும் திறந்து வைக்கப்படுவதில்லை.

(8) ஆலயங்களின் உள்ளேயும் வெளியேயும் சுற்றிவர காவலர்கள் வைக்கப்பட்டு, டெல்டேல் கடிகாரங்களும் வைத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

(9) சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடும் நபர்களை கவனித்து காவல்துறையினருக்கு தகவல் கொடுக்கவும், அவசியமானால் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வாங்கிக் கொடுத்து பயிற்சி அளிக்கவும் ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(10) களவு நடந்த உடனே காவல்துறைக்கும், ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டு அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(11) ஆலயச் சிப்பந்திகளின் நடவடிக்கைகளை, கண்காணிக்க வேண்டுமென்றும், ஏதாகிலும் ஒரு சிப்பந்தியின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் தீவிரமாக கண்காணித்து அவர் மீது காவல் துறையில் ஏதாவது புகார்கள் உள்ளதா என விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையானால், காவலர்களின் புகைப்படம் எடுத்து காவலரின் விவரங்களுடன் வைத்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(12) விக்கிரகங்கள் பாதுகாப்பாக இருப்பதனை காவல் துறையினர் அடிக்கடி கண்காணிக்க காவல் நிலையத்தில் இருந்து பட்டாப் புத்தகம் பெற்று அதில் ரோந்து வரும் காவலர்களின் கையொப்பம் பெறப்படுகிறது.

(13) சிலைத் திருட்டு நேர்வுகள் கடுமையான குற்றங்களாகக் கருதப்பட்டு ஒவ்வொரு நேர்வும் காவல்துறை துணைச் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் நடைபெறும் குற்ற வழக்குகளின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களின் போது சிலைத் திருட்டுகளில் புலன் விசாரணையின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். உள்ளூர் காவல்துறை சிலைத் திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்வதில் சிரமப்பட்டால் அவ்வழக்குகள் காவல்துறையின் குற்றவியல் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(14) காவல்துறையின் இரவு நேரத்துக் காவலர், மதிப்பு மிக்க சிலைகளுள்ள கோயிலுக்கு அடிக்கடி சென்று கோவிலில் அல்லது அதற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டி

LEGISLATIVE ASSEMBLY

கையொப்பமிடுகின்றனர். உள்ளூர் காவல்துறை அலுவலர்களும் இவ்விதக் கோவில்களுக்கு அடிக்கடி சென்று கண்காணித்து வருகின்றனர்.

(15) சிலைத் திருடர்கள் பற்றியும், திருடப்பட்ட சிலைகளை வாங்குபவர்கள் பற்றியும், சம்பந்தப்பட்ட காவல் அலுவலகத்தில் பட்டியல்கள் பேணப்பட்டு, சிலை திருடுவோர்களைத் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் சிலைகள் திருடும் குற்றவாளிகளின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவற்றினை முக்கியமான காவல் துறை ரேகைப் பதிவு அலுவலகங்களில் வைத்திருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(16) காவல்துறை சார்நிலை அலுவலர்கள் கோவில்களை அடிக்கடி கண்காணிப்பதுடன் காவல்துறை கண்காணிப்பாளர்களும் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட மதிப்புவாய்ந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்கும், மற்ற இடங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர்.

(17) தென்மாநிலங்களில் நடைபெறும் கற்சிலை, மற்றும் வெண்கலச் சிலைகள் திருட்டு பற்றியும் அவைகளைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவ்வப்போது கால முறையில் நடைபெறும் தென் மாநிலங்களின் காவல்துறை துணைத் தலைவர்களின் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டு, மாநிலங்களிடையே நடைபெறும் சிலை கடத்தலைத் தடுப்பதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(18) சிலை திருட்டு வழக்குகளை நடத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு கூடுதல் நீதித்துறை தலைமை நடுவர் கொண்ட தனி நீதிமன்றம் (Additional Chief Judicial Magistrate) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு உதவி செய்ய இரண்டாம் நிலை அரசுக் குற்றத்துறை வழக்கறிஞர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(19) சென்னையில் சிலை திருட்டு வழக்குகளை புலன் விசாரிப்பதற்காக காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஒருவர் இரண்டு ஆய்வாளர்கள் மற்றும் சில பணியாளர்கள் கொண்ட காவல்துறை தனிப்பகுதி ஒன்று இயங்கி வருகிறது.

மேலும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தலைமை செயலகத்தில் வணிகவரி அறநிலையத்துறை அரசுச் செயலர், காவல் துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர், தொல்பொருள் துறைத் தலைவர் ஆகியோருடன காலமுறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.